38—

சுற்றுலாத் தலம்

*1140—**திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, அணைப்பட்டி கிராமம், அருள்மிகு ஆஞ்சநேயர் கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–45

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்வது குறித்து, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் பெறப்படும் கருத்துரு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, சுற்றுலாத் துறையின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்விடத்தில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள், தொடர்ச்சியாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் நிலக்கோட்டை தொகுதி, அணைப்பட்டி கிராமம், அருள்மிகு ஆஞ்சநேயர் கோயிலுக்கு வருகை புரிவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குப் பரிந்துரை செய்யக்கூடிய சூழ்நிலையில், நிச்சயமாக சுற்றுலாப் பயனாளிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

திரு. ஆ. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த என்னை, நிலக்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராக்கி, வெற்றி

2011 ஆகஸ்ட் 16]

பெறச்செய்த உலகத் தமிழினப் போராளி, சமூக நீதிக் காவலர், நிறுவனத் தலைவர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அய்யா அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் மற்றும் கூட்டணிக் கட்சியினுடைய தலைவர்கள் அனைவருக்கும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அணப்பட்டி சுற்றுலாத் தலத்தை மேம்படுத்தித் தருவதாகக் கூறிய, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் முத்திரைச் சின்னமாக விளங்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலை மையமாக வைத்து சுற்றுலா மையம் ஒன்று அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், தனது தேர்தல் அறிக்கையிலே சுற்றுலாத் துறை மேம்படுத்தப்படும் என்பதைச் சொல்லி, அதன் தொடர்ச்சியாக, சுற்றுலாப் பயணிகள் எங்கெல்லாம் அதிகமாக வருகின்றார்களோ, அவ்விடங்கள் நிச்சயமாக மேம்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே நாங்கள் நேரடியாக பல இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்து வருகின்றோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஆண்டாள் கோயில் அமைந்துள்ள ஸ்ரீவில்லிபுத்தூரை நிச்சயமாக சுற்றுலாத் தலமாக்கிட விருதுநகர் ஆட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துருவைப் பெற்று ஆவன செய்யப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, நிச்சயமாக ஆவன செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய தொண்டனான என்னை, நாமக்கல் நகரக் கழகத் துணைச் செயலாளராகவும், நாமக்கல் மாவட்ட மாணவர் அணிச் செயலாளராகவும், நாமக்கல் நகரக் கழகத்தின் செயலாளராகவும், நாமக்கல் நகர மன்றத் தலைவராகவும், தற்போது நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுத்து ஆளாக்கி, அழகுபார்க்கின்ற, தாய் உள்ளம் கொண்ட எங்கள் குல தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) அண்டை நாட்டவரும் தேடி வந்து பாராட்டக்கூடிய எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களில், எனது சார்பாகவும், எனது குடும்பம் சார்பாகவும், நாமக்கல் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாகவும், கோடானுகோடி நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருவதால், சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். அதேபோல் அங்கே அதிக வாகனங்கள் வந்து கொண்டிருப்பதால், அவற்றை நிறுத்துவதற்குத் தனி இடம் ஒதுக்கித் தர மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அதிகமான சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் வரக்கூடிய ஓர் இடமாகவே அது இருந்து வருகிறது. நிச்சயமாக உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கோரிக்கை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கே வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்; என்னென்ன வசதிகள் செய்து தர வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மதிப்பீடு செய்து அனுப்புகின்றார்களோ, அதற்குரிய நடவடிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2011 ஆகஸ்ட் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

ஜவுளிச் சந்தை

***1250—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் ஜவுளிச் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் சாதாரணத் தொண்டனான எனக்கு 1989 முதல் 1998 வரை கழகத்தின் பல்வேறு பொறுப்புகளைத் தந்தும், 1998 முதல் 1999 வரை திருவள்ளூர் மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணிச் செயலாளராகப் பணியாற்றவும், 1999 முதல் தொடர்ந்து 12 ஆண்டுகளாக திருவள்ளூர் மாவட்ட புரட்சித் தலைவி அம்மா பேரவைச் செயலாளராகச் செயல்படவும், 2006 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்தும், மீண்டும் 2011-ல் திருவள்ளூர் தொகுதியில் போட்டியிட வைத்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்தும், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான கழக அரசில் (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சராகப் பணிபுரியவும் வாய்ப்பளித்த,* legendary, visionary, unparallelled and phenomenal leader *இதய தெய்வம் கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைப் பணிவுடன் சமர்ப்பித்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்குப் பதில் அளிக்க விழைகின்றேன்.*